# இந்துசாதனம்.

(1889)

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வ[illegible]னைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரிக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ஆல 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரூ. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கார்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு மேை விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௬. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சி௵ ஆடி௴ ௨0௳; (1924 ஆகஸ்ட் 4) திங்கட்கிழமை. } இலக்கம்—௬.


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநு லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானளிர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலெண் ரேறு
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழுவாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## புத்தக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரமஸ்ரீ வித்துவான். சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், சிவஞானபோதினி, பதவிருத்தியம், [illegible]ணம்பட்டமும், நீலகண்டியம், சேர்ந்த கட்டுவிலை ரூபா 2 00
2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00
3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பாகம் ரூபா 1 சதம் 50
4. சனிதுதி விலை அணா 1
5. நசகாரியம் அணா 5

ச. செல்லம்மையர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம். (H. 26.)


[ESTABLISHED 1909].

**MESSRS. A. S. M. A. KHADER BROTHERS**
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** *(South Arcot District)*

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனும[illegible]க்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் — சந்தோஷிக்கச் செய்வது.

உத்[illegible]

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்தது, இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

**லேகியத்தின் முக்கிய குணமாவது.**

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனானுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்சிலவு இனாம். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். வெளியூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனாமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனாமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன் நியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினாலாவது முன் கண்ட இனாம் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19,)

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.



இனாம்! இனாம்!! இனாம்!!!

இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அனுபவமுள்ள ஹக்கீம் K. முகம்மது யூசுபு அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதிநூல்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனாமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பரவும் பல நோய்கள் வீரியபலஹீனங்கள் நரம்புத் தளர்ச்சிகள் வீரிய நஷ்டத்தின் விபரங்கள் அநுஷ்டித்த காரணங்களையும் அதன் குணங் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.

ஜெகப்பிரசித்தி பெற்ற

## சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாக்கும்.



பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம்
குணமில்லையேன்று ரூபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கோடுக்கப்படும்.

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமமாய் எதைக் காட்டமுடியும். இதனை அனுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வசக்தியைப் போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அனேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்புகளின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசத்தியை விர்த்திசெய்யவும் தேககாங்கையினால் ஏற்படும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்புவலி கைகாலசதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்கெல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சிநேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு:—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இனாமென்று சபதங்கள் கூறிக்கொண்டு பல விளம்பரங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறபடியால் எமது விலாசத்தைக் கவனித்து ஆடர் செய்யவேணும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 40 நாள் | 80 வேளை | டப்பி 1க்கு | விலை | ரூபா | | | 10—0—0 |
| 20 | ,, 40 | ,, | ,, | ,, | ,, | | 5—0—0 |
| 10 | ,, 20 | ,, | ,, | ,, | ,, | | 2—8—0. |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம். பினாங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் சிலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினால் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்.

ஹக்கீம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தென்னாற்காடு ஜில்லா)
(H. 27.)

Hakeem K. Mohamed Yoosoof,
*Mohamedia Medical Hall,*
Porto-Novo, S. A. Dt.(INDIA.)



மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!

திமிர், குஷ்டம், தீர்ந்து விட்டன!

மதமதப்புமாரி சொரணையுண்டாகி விட்டன.

தடிப்புகள் [illegible]றிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன, ...

சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,

ரணங்கள் ஆறிவிட்டன,

குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம் நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது

அநேக நற்சாட்சிகளும் தங்கமெடலும் பரிசு பெற்று
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்கமெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாத முள்ளது. குணம் இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

## தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.

முப்புவினால் தனுக்கற நீற்றியது. களிம்பற்றது.

வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.

வியாதிகளை விபரமாய் எழுதவும்.

உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அனேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினால் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம் ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட்கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினால் பொறுக்கமுடியாத கைகால் குடைச்சலை உடனே நிறுத்தும். குறை நோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணாகாது. எந்த மருந்திலுந் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும இதில் அவசியந் தீரும்; வெட்டை, மூத்தி மொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் ஊரந்தி, நரைச்சல், மேகஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுந்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 கிராணி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, சந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆறுதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கை வலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மயிமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.

R. M. K. வேலுசாமிபிள்ளை,
சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.

(Y. 31.)

# இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:—இரத்தாட்சி௵ ஆடி௴ 20உ திங்கட்கிழமை.

## தென்னிந்தியாவில் வெள்ளப்பிரவாகம்.

சிலகாலங்களாகத் தென்னிந்தியாவில் இடையிடையே வெள்ளப்பிரவாகம் அதிகரித்துவருகின்றது. இதனாற் காலந்தோறும் ஏற்படும் பெருநஷ்டமும் சேதமோசமும் அளவிடற்கரியனவாகும். சென்ற சிலநாட்களுக்குமுன் மைசூரிலும் மேற்குமூலையிலும், நீலகிரியிலும் பெருமழை பெய்தது. இதனால் தென்னிந்தியாவிலுள்ள சேர சோழ பாண்டி நாடுகளும், கொங்குநாடும், மைசூர் பர்மா முதலான தேசங்களும் வெள்ளப்பிரவாகத்தில் ஆழ்ந்தன. இத்துடன் பூகம்பமும் ஒன்று புதிதாகத்தொடங்கிக்கொண்டது. பல கிராமங்கள் சலத்தில் மூழ்கின. ஆயிரக்கணக்கான வீடுகள் அழிந்தன. சிறு பாலங்கள் நாசமாயின. கொள்ளிடப் பாலம் முதலான பெரிய பாலங்கள் பல சேதப்பட்டன. இவ்வெள்ளப்பிரவாகத்தினாற் பல்லாயிரக்கணக்கானோர் மாண்டனர். கன்னடம் தென்மலையாளம் வடமலையாளம் முதலான இடங்களில் உண்டான பிரவாகம் சொல்லுந்தரத்ததன்று. வெள்ளத்தின்மேல் ஆயிரக்கணக்கான பிணங்கள் நீந்துகின்றன; மிதக்கின்றன. கள்ளிக்கோட்டையில் ஆயிரம் வீடுகள் நாசமாயின. பல இடக்களிலே தென்னைமரங்களின் குருத்துக்கள்மாத்திரம் தோற்றப்படுகின்றன. 9000 பேருள்ளமூன்றுகிராமங்களில் 8000 பேர் மாண்டனர். கொச்சியிலுள்ள ஒரு வித்தியாசாலை திடீரென இடிந்தது. அங்குக் கல்விகற்ற 64 சிறுவர் உடனே மாண்டனர். மைசூரிலுள்ள கண்ணம்பாடி அணையின் உயரம் 80 அடி. அந்த அணைக்குமேல் 18 அடி உயர வெள்ளம் நிற்கின்றது.

மற்றைய இடங்களில் சேர்ந்துள்ள அழிவும் சேதமோசமும் இன்னமும் வெளியாகவில்லை. ஆயினும் தென்னிந்தியாவிலுள்ள பெரும்பான்மையான இடங்கள் அதிக சேதமடைந்தனவென்றே கூறலாம். தென்னாட்டைவிட்டு நீங்காதிருந்த கொடிய பஞ்சமும் இந்த வெள்ளப்பிரவாகத்தினாலேயிப்பொழுது நூறுமடங்கு அதிகரித்துவிடுமென்பது திண்ணம். யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் பெரும்பாலும் இந்தியாவிலிருந்து இங்குவரும் நெல்லையும் அரிசியையும் நம்பியே உலை வைப்பவர்களாக இருக்கின்றனர். தென்னாட்டிலே வெள்ளப்பிரவாகத்தினாற்பெரும் அழிவும் அதிக சேதமோசமும் ஏற்பட்டமை காரணமாக இனிமேற் சிலகாலங்களுக்கு அங்கிருந்து நெல் எமது நாட்டுக்கு வரமாட்டாதென்பது திண்ணம். இதனையறிந்த இங்குள்ள நெல் வியாபாரிகள் விலையையேற்றிவிற்கத் தொடங்கிக்கொண்டனர். இப்பொழுது அரிசி ஒருபறைக்கு ஒன்றரை ரூபா ஏறிவிட்டது. தென்னிந்தியாவிலே வெள்ளம் எவ்வளவுக்கு உயர்ந்ததோ அவ்வளவுக்கு இங்கே அரிசிநெல்விலை உயரும்போலக் காணப்படுகிறது.

தென்னிந்திய மக்களுக்கு வெள்ளப்பிரவாகத்தினாற்சேர்ந்துள்ளபோராபத்துக்களையும் சேதமோசங்களையும் கேள்விப்பட்டுப் பெரிதும் பரிதாபமுற்று வருந்துகின்றேம். இவ்வெள்ளப்பிரவாகம் நிகழ வேண்டியதற்குக் காரணமும் இருக்கதான்வேண்டும். எமது சமயக்கொள்கைப் பிரகாரம் "ஆதியாங் கடவுள் எந்தை ஆலவாய் அமலன மங்கை பாதியான் சிறந்தபூசை பண்டையிற் குறைதல்," அல்லது "நீதியாந் தவத்தின் மிக்கார் நெஞ்சகம் புழுங்க மண்மேல் தீது செய்தல்" ஆகிய இந்த இரண்டில் ஒன்றாகவே யிருத்தல் வேண்டும். இந்த இரத்தாட்சி வருடம் இன்னமும் என்னென்ன போராபத்துக்களையும் சேதமோசங்களையும் விளைக்க இருக்கிறதோ நாம் அறியேம். கிருபாசமுத்திரமாகிய பரம்பொருள் அங்குள்ள மக்களுக்குத் திருவருள் பாலித்து அவர்களைப் பாதுகாத்தருளவேண்டுமெனப் பன்முறை பிரார்த்திக்கின்றேம்.

## பக்திமார்க்கமே கடவுளை அடைதற்கு லகுவானவழி.

(வண்ணை நகர்
ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை
எழுதியது.)

கடவுள் மனம் வாக்குக் கெட்டாதவராயினும், உடல் பொருள் ஆவி மூன்றினையும் அவரது உடைமைகளென அர்ப்பணஞ்செய்து, அப்பசுபதியின் பற்றல்லாமல மற்றுப் பற்றின்றி நிற்கும் அடியாரது அன்புக் கயிற்றிற் பிணிப்புண்டிடுப்பர். அதுபற்றியே,

"கனியினுங் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்தாளு மரசினும்
இனியன்றன்னடைந்தார்க்கிடைமருதனே."

என்று வாகீசப் பெருந்தகையாரும், 'அடைந்தவர்க்கமுதாயிடுவான்' என்றும், 'அன்பிற்கெளிவந்த பிரான்' என்றும், நம்பியாரூரரும், "பத்திவலையிற்படுவோன்" என்று வாதவூரடிகளும் கூறியருளினர்கள். அப்பெருமான் தமதடியாரின் அன்பின் வலையிலகப்பட்டே தண்ணீர்ப்பந்தர் வைத்தும், வில்லடியுண்டும், மல்யுத்தம் புரிந்தும், பிரம்படிபட்டும், செருப்படி தாங்கியும், உச்சிட்டவூனை யுவந்தும, வாய்நீரைக் கங்கையுதகமாக மகிழ்ந்து ஏற்றும், குடுமியிற் சொருகிய மலரைத் தரித்தும, தாயாகிவந்து சூதிகாமனையிற் பரிகரித்தும், பாதிரிசியிற ஊறுசென்றும், கல்லாலெறியக் கயிலையளித்தும், மாங்கனிக்காக மலரடியீந்தும், ஓட்டைக் கொடுத்து வீட்டையுதவியும், ஆவணங்காட்டி அடிமைகொண்டருளியும், சூடர்நோய் கொடுத்து அடியவனாக்கியும், நவிந்தழு சேய்க்கு ஞானப்பாலுதவியும், வசைமொழிகூற மனமிகமகிழ்ந்தும், சேய்க்கறி வேட்டுத் திருவடியீந்தும், பதிநியுதவப் பாகிவழங்கியும், கன்றுகட்டாப்பிற் காட்சிகொடுத்தும், சிறப்புறுமாக்கால் சிவலிங்கமாக்கியும், வந்திக்காளாய் மண்டலைசுமந்தும், வாதவூரருக்காய் மாவினைக் கொணர்ந்தும், காதகனூசியால் கோதை மாலகற்றியும், மூதெயிலெரித்து மூவரைப்புரந்தும், மறைமுனிசேய்தொழ மறலியைத்தடிந்தும், சாபத்தாற்கவன்ற சசியைத்தரித்தும், திருமால்துதிக்கத் திகிரியையுதவியும், நிதிக்கிழவோனை நேசனாக்கொண்டும், கடவுளரமற்றக் கடுவினையருந்தியும், கிராதனாய்வந்து கேழலைவதைத்தும், சக்கரப்படையாற் சலந்தரற்பிளந்தும், அயனரியிருவரி னங்கைதொலைத்தும், பன்றியாய்ப்போந்து பாலினைப்புகட்டியும், பூசரன்றனக்குப் பொற்கிளி வழங்கியும், மாதலனாகி வழக்கினைவென்றும், கல்லானைக்குக் கருமபினையருத்தியும், பார்ப்பனியிறந்த பழிதெளிவித்தும், செந்தாமரையோன் சிறையினையகற்றியும், பார்த்தனுக்கன்று பாசுபதமுதவியும் இன்னுமிவைபோன்ற பல திருவிளையாடல்களைச் செய்தருளினர். க[illegible]வுட்பக்தியற்ற [illegible]தகைய நல்வினைகளும் தீமையையே பயப்பனவன்றி உத்தமபலனை யொருபோது மளிக்கமாட்டா. அதற்குத் தக்கன் செய்த யாகமும், தாருகாவனத்து இருடிகளியற்றிய தவமும், மாரன் எறிந்த மலரும் அவைகளை உஞற்றிய கர்த்தர்களைச் சகித்தற்கரிய இன்னலநுகரச் செய்தமையே போதிய சான்றாகும். பேரருளாளராகிய அச்சிவபிரான் சிவகோடிகளிடத்தில் தமது வரம்பற்ற கருணைமழையை அநவரதமும் பொழிகின்றார். அவர் நம்முடைய பக்திக்கு அகப்படுபவராயிருத்தல்போல, நாமும் அவருடைய கிருபைக்குப் பாத்திரர்களாயிருக்கின்றேம். ஆகவே வரம்பிலாற்றல் வரம்பிலின்பம் முதலிய எண்குணங்களையுமுடைய சிவபிரானே முழுமுதற்கடவுளென்பதும், அவர் தம்மீது பக்திசெலுத்தும் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடைய தாசர்களைச் சந்ததமும் நேசிக்கிறார் என்பதும், "வெள்ளிடை விலங்கலை" யொக்கக் காணப்படுகிறதன்றோ? அம்மட்டோ அப்பெருமான் பிறவிப்பிணி முதலிய நமது இன்னல்களைப் போக்கித் தமது நிறைவாகிய அநந்தகல்யாண குணங்களினால் நம்மைப் புனிதராக்கித் தம்மோடு ஒன்றுபடுத்திக்கொள்ளுகின்றார். இதுபற்றியே, "ஆணவத்தோடத்துவிதமானபடி மெஞ்ஞானத்—தாணுவினோடத்துவிதஞ் சாருநாளெந்நாளோ" என்று மெஞ்ஞானச் செல்வராகிய தாயுமானசுவாமிகளுங் கூறியருளினர்.

இங்ஙனமே நமது யாழ்ப்பாணத்துள்ள சித்தாந்த சைவர்களாகிய ஆடவர் பெண்களிருபாலாரும் பக்திமார்க்கத்தில் ஈடுபட்டு ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்து சாட்சாத் சகதீசனுடைய தியானத்தோடு தேவாலய வழிபாட்டிற்குச் செல்வதை, முழு ஆடு கோழிகளை அருந்துபவர்களும், கள்ளுக்கடையே சதமென்று கிடப்பவர்களும, எக்காலமும் சுசிகரத்தமில்லாதவர்களுமாகிய சில மாயாவாதிகளும், ஏகான்மவாதிகளுங் கண்டு, நாங்கள் ஒவ்வொருவரும் பிரமமாயிருக்கும்போது கோயிலிலே யாரை வழிபடப் போகின்றீர்களென்று மிகவும் பரிகசிக்கின்றார்கள். அந்தோ! இவர்கட்குக் கூற்றுவனை கூவி கொடுப்பன். இந்த ஏகான்மவாதத்தை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அருச்சனனை பரிபக்குவமுள்ள சீடனென்று கருதி உபதேசித்தார். அங்ஙனம் முதற் சீடனாக உபதேசிக்கப்பெற்ற அவ்வருச்சுன[illegible] ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி போதித்த ஏகான்மவாதத்தைக் கைக்கொள்ளாது மரணபரியந்தம் சிவபூசாதுரந்தரனாயிருந்தனன். இது பாரதம் பதின்மூன்றும் போரிலன்றிரவு கைலாச தரிசனஞ் செய்யச்சென்ற அருச்சுனன் பசியினால் வருந்துவதுகண்ட கிருட்டினர், அவனைப் பழம் உண்ணுமாறு சொல்லியும் அவன் அதற்கிசையாது "பாவை பங்கன்மேற் புரிந்திலனின்னமும் பூசை" என்று கூறி மறுத்தமையான் நன்கு விளங்கக்கிடக்கின்றது. அந்தப் புண்ணிய விசேடத்தால், மற்றைச் சன்மத்திற் கண்ணப்பநாயனாராக அவதரித்துக் காளத்தியப்பருக்குக் கண்ணிடந்து அப்பிப் பிறவாமுத்தியெய்தப்பெற்றான். அந்த அருச்சுனனே கைகழுவிவிட்ட ஏகான்மவாதக் கொள்கையை நமது போலி வேதாந்த நண்பர்கள் நம்மவரைக் கைக்கொள்ளும்படி போதிப்பது நீதியாகுமா? அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! மாயாவாதிகள் முதலியோரின் மயக்கவுரையிலெடுபட்டு உங்கள் பக்திநிலையைத் தணந்து பதிதராகிப் பிசாசபதமடையாது, பரமசிவத்தின் பாதசரோருகங்களை "அழலிடைப்பட்ட மெழுகது போல", உள்ளம் நெக்குருக, உரோமஞ் சிலிர்ப்பப் பத்தியோடிறைஞ்சிப் பரகதியடைமினே!

## பயங்கரமான தற்கொலைகள்.

கொடிய இரத்தாட்சி வருடமே, நீ ஆரம்பித்த நாட்டொடக்கம் இற்றைவரையில் இடையீடின்றித் தினந்தோறுங் கொண்டு வரும் துக்க சமாசாரங்களுக்கும் பயங்கரமான சம்பவங்களுக்கும் அளவில்லை. இன்னும் எத்துணைத் துன்பசமாசாரங்களை நீ ஒழிவதற்கு முன் கொண்டுவந்து சேர்ப்பாயோ நாமறியேம். சென்ற வெள்ளிக்கிழமை யிரவுநிகழ்ந்த பயங்கரமான சம்பவம்போன்ற சம்பவத்தை முன் ஒருபோதும் யாம் கேட்டதில்லையே. கேட்கத் தலை விறைக்கின்றது, நினைக்கச் சரீரம் பதறுகின்றது, சொல்ல வாய் கூசுகின்றது, எழுதவென்றாற் கையெழவில்லை. சுதுமலையில் தாய்தந்தையரையும் ஒரு புதல்வனையும் மூன்று புதல்வியரையுங்கொண்ட ஒரு ஏழைக் குடும்பத்தில் புதல்வனே அரசாங்க உத்தியோகம் பார்த்து முழுக்குடும்பத்தையும் சம்ரட்சித்துவந்தான். த[illegible]ப்பன் மதுபானத்திற்கு இரையாகிப் பய[illegible]வனானான். இங்ஙனமாக இற்றைக்கு ஆறுமாசங்கட்கு முன்னர் இவ்வாலிபன் க்ஷயரோகத்திற்காளாகித் தன் கடமையையும் பார்க்க முடியாதவனானான். முதல் நான்கு மாசங்களுக்கும் அரசினர் பாதி வேதனம் உதவிவந்து ஈற்றில் அதனையும் உதவாதொழிந்தனர். பெற்ற தாயானவள் தன் பிள்ளையைப் பல சிறந்த வைத்தியரிடங் காட்டி வைத்தியஞ் செய்வித்தனளேனும் நோய் மாறியபாடில்லாமையாற் பெரிதும் மனத்துயரடைந்தாள். தன் மகனுக்குண்டான நோய் அசாத்தியமானதென வைத்தியர் மூலமாக வறிந்த அன்னை தன் பெண் குழந்தைகள் மூவரையும் அழைத்துச்சென்று தனது வீட்டிற்குக் கால் மைல் தூரத்திலிருக்கும் ஒரு தோட்டக் கிணற்றுட் பிள்ளைகள் மூவருடனும் குதித்தாள். இறைப்புக்காரர் சனிக்கிழமை விடியற்காலையிற் சென்று கூபத்தைப் பார்த்தபோது தாயும் பிள்ளைகள் மூவரும் பிரேதமாகக் கிணற்றுள் மிதப்பதைக் கண்டு அதிகாரிகட்குத் தெரிவித்தனர். விசாரணைசெய்தபின் பிரேதங்கள் அகற்றப்பட்டன. அந்தக் கிராமம் முழுவதும் சஞ்சலத்தோடு கூடியிருக்கின்றது. அந்தோ பரிதாபம்! பரிதாபம்!!

## சமாசாரம்.

நல்லூர்க் கந்தசுவாமிகோவில் உற்சவாரம்பம்:—வருகிற ஆடி௴ 22உ (6-8-24) புதன்கிழமை மேற்படி ஆலயத்தில் துவசாரோகணமாகி வழக்கம்போல உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

நீர்வேலி வாய்க்காற்றரவை விநாயகர் உற்சவாரம்பம்:—வருகிற ஆடி௴ 22உ (6-8.24) புதன்கிழமை மேற்படி ஆலயத்தில் துவசாரோகண உற்சவம் ஆரம்பமாகி இந்த௴ 31உ (15-8-24) வெள்ளிக்கிழமை இரதோற்சவம் நடைபெறும்.

எமது புதிய ஏசன்றர்:—எமது வடமாகாணப் புதிய ஏசன்றராகிய மிஸ்டர் F. J. சிமித் அவர்கள் சென்ற வியாழக்கிழமை இங்குவந்து தமது உத்தியோகத்தைக் கையேற்றனர்.

பிரசங்கம்:—சென்ற இரவு திருநெல்வேலி வைரவர் கோவில் மண்டபத்தில் நீர்வைவாசன் சிற்சபேசன் அவர்களால் "நன்றிமறவேல்" என்னும் விஷயமாக ஓர் உபந்நியாசம் செய்யப்பெற்றது. ஸ்ரீ வி. சின்னையா உபாத்தியாயரவர்கள் குறிப்புரையும், அக்கிராசனம் வகித்திருந்த ஸ்ரீ இ. கந்தையா உபாத்தியாயரவர்கள் முடிபுரையும் கூறினர்.

சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை:—இந்த ஆடி௴ 23உ (7-8-24) வியாழக்கிழமை சமயகுரவர் நால்வருள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனாருடைய குருபூசைத்தினமாம். இப்புண்ணியதினத்திலே ஆலயங்களில் விசேஷ அபிஷேகம் பூசை முதலியனவும், திருமடங்களிலும், சைவவித்தியாசாலைகளிலும் மகேசுவர பூசை உபந்நியாசம் முதலியனவும் செய்வித்தல் சைவநன்மக்களுடைவிசேடகடமையாகும்.

உபந்நியாசம்:—சென்ற சனிக்கிழமை இரவு கந்தர்மடம் கந்தபுராண மண்டபத்தில் நீர்வைவாசன் சிற்சபேசன் அவர்களால் "திருத்தொண்டு" என்னும்விஷயம், அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவராகிய குங்கிலியக்கலய நாயனாருடைய திவ்விய சரித்திரமூலம் பக்கவாத்தியசகிதமாகப் பிரசங்கஞ் செய்யப்பெற்றது. யாழ்ப்பாணம் வைத்தியசாலைத் தலைமை வகிதராகிய ஸ்ரீ செ. மயில்வாகனமவர்கள் குறிப்புரை கூறினர்.

தாசியாட்டத்தினாற் கல்லேறியும் கல்லேறியினாற் போலிசும் வந்தன:—சுதுமலை எச்சாட்டி வைரவர் கோவிலிற் சென்ற வியாழக்கிழமை நடைபெற்ற அலங்கார உற்சவத்தில் தாசியர் நடித்தமையினாற் கலகமுண்டாயது. அக்கலகத்திற் சேர்ந்த ஒருசாரார் கற்படைவிடுத்தனர் கற்படைக்கஞ்சினோர் அங்கிருந்து மோட்டரதமூர்ந்து இங்குள்ள பொலிஸ்தானத்தில்முறையிட்டுப் பொலீசரை அழைத்துச்சென்று கலகத்தை அடக்கி நடனத்தை நிறைவேற்றினர்.

ஒரு ஆசிரியை தண்டிக்கப்பட்டமை:—யாழ்ப்பாணம்தையிட்டிவித்தியாசாலையில் ஆசிரியையாக இருந்த மிஸ். அந்தோனி முத்தம்மா டை வித்தியாசாலை மானேசருக்கு விரோதமாக ஒரு பொய்யான அறிவித்தலை வித்தியாகோட்டியாருக்கு அனுப்பியமையினால், வித்தியாகோட்டியார் டை ஆசிரியையை அரசினர் பாடசாலையில் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலையில் ஆறுமாத காலம் கடமைபார்க்கவிடாது நிறுத்தியிருக்கின்றனரெனச் சென்ற ஜுலாய்௴ 25உ வெளிவந்த கசற் பத்திரிகை கூறுகின்றது.

அந்நிய தேசக்குடிவகை வியாபாரிகள்:—யாழ்ப்பாணத்திலே அந்நியதேசக் குடிவகைக் கடைகள் வைத்திருப்பவர்களாகிய மிஸ்றர் H. D. அனிசெஸ்ரே, மிஸ்றர் யோசேப்மெச்சாடோ, மிஸ்றர் எஸ். மெச்சாடோ, ஸ்ரீ என். பொன்னுச்சாமி, ஸ்ரீ ச. பேரம்பலம்செட்டியார், ஸ்ரீ என். சுப்பிரமணியம் (பருத்தித்துறை) என்னும் அறுவர் அடுத்த ஐப்பசி௴ 1உ தொடக்கம் 1925 ம் வருடம் ஐப்பசி௴ 1உ வரைக்கும் தமது கடைகளில் அந்நியதேசக் குடிவகை விற்பதற்காக அனுமதி (லைசென்ஸ்) பெறும்பொருட்டு மனுப்பண்ணியிருக்கின்றார்களெனச் சென்ற ஜுலாய்௴ 25உ வெளிவந்த கசற்பத்திரிகையில் வெளியிட்டிருக்கின்றனர்.

கதிர்காமக்ஷேத்திரத்திற்சமாதியுற்றமகான்:—இம்மகான் யாழ்ப்பாணம் வடமராட்சியிலுள்ள வதிரி என்னும் கிராமத்திலே 1819-ம் வருடம் அவதரித்து முருகேசபிள்ளை என்னும் நாமத்துடன் விளங்கியவர். இவர்இளம்பிராயத்திலே தமது ஜெநக ஊரைவிட்டு மாத்தளையிற்குடியேறி அங்குள்ள சைவருக்குத் தலைவராகவிளங்கினர். சமயநூலாராய்ச்சி பெரிதும் உடையராய் மிகுந்த பக்தியுடன் சிறந்தனர். இவர் மாத்தளையிலே ஒருதேவிஆலயம் அமைத்துத் தாம் சமாதி பெய்துபரியந்தம் அவ்வாலயத் தருமபரிபாலகராக இருந்தனர். இவர் மாத்தளைப்பகுதியில் நெடுங்காலம் பிரசித்த நொத்தாரிசுவாகவும் உத்தியோகம் வகித்தனர். இம்மகான் (தமது 105-ம் வயதிற்) சென்ற ஜுலாய்௴ 14உ திங்கட்கிழமை கதிர்காமக்ஷேத்திரத்திலே சமாதியெய்தினர். இவருடைய சமாதிமுத்துலிங்கசுவாமிகோயிலுக்குப் பக்கத்திலிருக்கிறது.

கோரவடிவமான திமிங்கலம்:—சென்ற வாரம் நீர்கொழும்பிலே பிரமாண்டமான ஒரு திமிங்கலம் கரையில் ஒதுக்கப்பட்டிருந்தது. அது 40 அடி நீளமும் 30 அடிச் சுற்றளவுள்ளதுமாக இருந்தது.

புகைரதவண்டியில் நெருப்புப் பற்றியது:—சென்றவாரம் கொழும்பிலிருந்து நீர்கொழும்புக்குச் சென்ற புகைரதத தொடரின் முதலாவது வண்டி ஒன்றில் நெருப்புப் பற்றியது. அந்நெருப்புக் காலதாமசமின்றியும் அதிகசேதமின்றியும் தணிக்கப்பட்டது.

சுருட்டுப் பெட்டிக்குள் அபின்:-மருதானைக்கு அனுப்பட்ட சுருட்டுப்பெட்டி ஒன்றில் ஆறு றாத்தல் அபின் காணப்பட்டது. அச்சுருட்டுப் பெட்டிக்குரியவராகிய சந்தைய இளையதம்பி என்பவர்மீது கொழும்புப்பொலிஸ் கோட்டிலே வழக்குத்தொடரப் பட்டிருக்கிறது.

மகோப் புகைரதஸ்தானத்தில் விசேஷ திருத்தம்:—மட்டக்களப்புத் திரிகோணமலைப் புகைரதவீதி மகோவில் வந்து சந்திப்பதனால் அங்குள்ள புகைரதஸ்தானத்தில் விசேஷ திருத்தங்கள் செய்யும்பொருட்டு, சட்ட நிரூபண சபைப் பண பரிபாலன சங்கத்தார் 163,927 ரூபா செலவுசெய்யத் தீர்மானித்திருக்கின்றனர்.

## நூல்களைப்பற்றிய குறிப்பு.

**அரிச்சந்திரபுராணம் - மயானகாண்டம்:—** ஆசுகவிராயர் இயற்றிய அரிச்சந்திரபுராணத்துள்ள மயானகாண்டம் 136 செய்யுட்களும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியரும், இப்பத்திரிகையின் ஆசிரியருமாகிய ஸ்ரீ ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய பொழிப்புரை இலக்கணக்குறிப்பு விசேடவுரை முதலியவற்றுடன் இரண்டாம்பதிப்பாக அச்சிடுவிக்கப்பட்டு வெளிவந்துள்ளது. ஏழாம் எட்டாம் வகுப்புக்களிற் கல்வியிலும் மாணாக்கர்கட்குச் செய்யுட்பாடமாக உபயோகிக்கப்படுவது. விலை சதம் 50. பிரதிகள் மேற்படி உரையாசிரியரிடத்திலே பெறற்பாலன.

**கீரிமலைமகத்துவம்:—** மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் ஒருங்கு அமையப்பெற்ற கீரிமலை மாவிட்டபுரம் என்னும் திவ்விய க்ஷேத்திரங்களின் மகத்துவத்தை இந்நூல் இனிது கூறுவது. தட்சிணகைலாச புராணம், திரிகோணாசல புராணம், கைலாசமாலை, வையாபாடல், ஈழமண்டல சதகம் என்னும் இந்நூல்களை ஆதாரமாகக் கொண்டு வண்ணைநகர் ஸ்ரீ ரா. வை. தியாகராஜா அவர்களால் இனிய தமிழ் வசனநடையில் இது எழுதப்பட்டுள்ளது. பிரதி யொன்றின் விலை சதம் 19. பிரதிகள் வண்ணார்பண்ணை பிரித்தானியா புத்தகசாலையிற் பெறற்பாலன.

**சிறிய விநோதக்கதைகள் (முதலாம்பாகம்).** படிப்போர்க்கு விவேகத்தையூட்டத்தக்க 29 இனிய கதைகள் ஓர் ஆசிரியரால் திரட்டப்பட்டு, யாழ்ப்பாணம் ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளையால் தமது நாவலர் அச்சியந்திரசாலையில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. இக்கதைகள் தமிழ் ஆரம்ப மாணவர்கட்கு வினைப்பு வாசகபாடமாக உபயோகிக்கத்தக்கன. பிரதியொன்றின் விலை சதம் 10. பிரித்தானியா புத்தகசாலையிற் பெறற்பாலன.

**இளைஞர் கணிதம் ஐந்தாம் புத்தகம்.—** இக்கணிதநூல் தமிழ் ஐந்தாம் வகுப்பிற் கல்வியிலும் மாணவர்கட்குப் பெரிதும் பயன்படத்தக்க இலகுவான வழிகளை அனுசரித்தும், வித்தியாபகுதியாரின் புதிய விபந்தனைகளை ஒட்டியும் நன்கு எழுதப்பட்டுள்ளது. கணிதகலாநிதிநூற் றொகையாசிரியரும் சாவகச்சேரிச் சைவாங்கில வித்தியாசாலை ஆசிரியருமாகிய ஸ்ரீ மா. பீதாம்பரம்பிள்ளையே இதனாசிரியராவர். இவ்வாசிரியர் வெளியிட்ட கணித நூல்கள் யாவும் தமிழ் வித்தியாசாலை ஆசிரியர்களாலும் மாணாக்கர்களாலும் உவந்தேற்று உபயோகிக்கப்படுகின்றன. இதுவும் அங்ஙனம் உவந்து அங்கீகரிக்கப்படுமென்பதே எமது அபிப்பிராயம். பிரதியொன்றின் விலை சதம் 40. வண்ணார்பண்ணை பிரித்தானிய புத்தகசாலையிலும், சாவகச்சேரிப் புத்தகவியாபாரி M. M. அப்துல்காதரிடத்திலும் மேற்படி பிரதிகள் பெறற்பாலன.

**"சைவ பரிபாலனம்":—** இது திரிசிராப்பள்ளியைச்சார்ந்த கருவூரினின்றும் சென்ற மூன்றுவருடகாலமாக மாசமிருமுறை வெளிவரும் ஒரு சிறந்த சைவசித்தாந்தப் பத்திரிகையாகும். இதன் ஆசிரியர் ஸ்ரீலஸ்ரீ கந்தசாமித் தம்பிரானவர்களாவர். சைவசித்தாந்த சம்பந்தமான அரிய விஷயங்களும் பிறவும் இப்பத்திரிகையில் இனிது வெளியிடப்பட்டுள்ளன. சைவநன்மக்கள் ஒவ்வொருவரும் இப்பத்திரிகையை ஏற்றுப் படித்து நன்மையடைதல் வேண்டுமென்பதே எமது விருப்பம். பத்திரிகையின் வருடக்கிரயம் மூன்றரைரூபாவாகும். விலாசம்: சைவபரிபாலனப் பத்திராசிரியர், கருவூர், திரிசிராப்பள்ளி "டிஸ்திறிச், என எழுதுக.

எமக்கனுப்பிய புத்தகங்களையும் பத்திரிகைகளையும் நன்றியறிதலுடனேற்றும்.

## பூகம்பம்.

செங்கோட்டைக்கு அருகே பகவதிபுரத்தில் ஒரு பூகம்பம் ஏற்பட்டதென்றும், அநேக தந்திக்கம்பங்களும் கட்டிடங்களும், பூமிக்குள் புதைந்து விட்டனவென்றும் தெரிகிறது. செங்கோட்டைப் பாதையிற் பெய்த பெருமழையால் அநேக மலைச்சரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. மரங்கள்முறிந்து கிடக்கின்றன.


# தேக்க மரம்.

றங்கூனிலுள்ள பேர்போன அங்கில கொம்பனியாரிடமிருந்து புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவை தொண்டமானாற்றிலும், யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எமது கிட்டங்கி வளவிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை விபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு.

தந்திவிலாசம்:—
ஷாபி. வல்லுவெட்டித்துறை.
(H. 29.)


## சைவசமயவளர்ச்சிக்காக நாம் செய்யவேண்டிய வேலையாது?

(முற்றொடர்)

இனித் தாழ்ந்தவகுப் பாரை உயர்த்துதற்கு நம்மால் எவ்வளவுதூரம் பாடுபடமுடியுமோ அவ்வளவுதூரம் அவசியம் பாடுபடல்வேண்டும். புறமதம் புகுவோரிற் பெரும்பாலார் தாழ்ந்த வகுப்பாரேயாவர். காரணம் நாம் அவர்களுக்குச் சமயஞான போதனையுஞ் செய்யாது, நம்மை நண்ணவும் விடாது அடிர்ந்து தாழ்த்துகிலேயாம். அன்னோரும் மாக்களேயென வினையாது, இவ்வாறு நாம் அடிர்ந்து தாழ்த்துமளவில் நமது சமயம் வளருதற்கு இடமேயில்லை! ஒரு சமயம் என்பது, பலரும் வந்து சேர்ந்து பலன்பெற்றுய்யுமாறு தளது வாயில்களைத் திறந்து வைத்திருந்தாலொழிய, அது சமயம் எனப்படமாட்டாது. விரிந்த நோக்கத்தோடு ஒருசமயத்வது உலகம் முழுவதும் பரப்பவெண்ணாது, இலைமறை காய்போல் ஒருசிலர்க்குமட்டும் பயன்படுமாறு மறைத்துவைத்துக்கொள்ளுதல் தகாது! தகாது!! தாராளமாக மக்களாவாரனைவரும் தன்னையடைந்து ஆனந்தவெள்ளத்தில் திளைக்கும்வண்ணம் எல்லோரையும் அறைகூவி யழைத்து ஆட்கொள்ளுவதே ஒரு சமயத்திற்குச் சிறந்தஅடையாளமாகும்.

எனவே, நமது அருமைச் சகோதரர்களாகிய தாழ்ந்த வகுப்பாரை உயர்த்தி அன்னோர்க்கும் நம்மத உரிமைகளை நல்கி நல்வழிக்குய்த்தற்குரிய நெறிகளை வகுத்துக் காட்டுதலில் நாம் ஒருநாளும் பின்வாங்குதலாகாது. சில தொண்டர்கள் தம் வாழ்நாளை அவர்களுக்கெனச் சிறப்பாகப் பாடுபடுவதில் ஈடுபடுத்துதல் வேண்டும். சுகாதார நெறிகளை அவர்களுக்கு நன்கு போதித்தல்வேண்டும். அன்னோரிற் சிலர் நாம் உண்டு எறியும் எச்சிலை உண்டலையும், மாடுகளை வெட்டித்தின்னுதலையும், கட்குடித்தலையும் அறவே யொழித்துவிடுமாறு செய்தல்வேண்டும். அவர்களுடைய பிள்ளைகளுக்கெனச் சிறப்பான கலாசாலைகளைத் தாபித்து, நல்ல ஆசிரியர்களைக்கொண்டு அப்பிள்ளைகளை நன்னெறியிற் பழக்குதல் வேண்டும். அவர்கள் குடிசைகளுக்குச் சமீபத்தில், அவர்களுக்கெனச் சிறப்பாகப் பிள்ளையார் கோவில்களை ஏற்படுத்தி, அவைகளில் அவர்கள் தினந்தோறும் வந்து வழிபாடு செய்யும்படி செய்தல்வேண்டும். இதற்கு ஒரு திருத்தொண்டர் நூறு இருநூறு பிள்ளையார் விக்கிரகங்களைச் செய்து அவர்கள் இருக்குமிடங்களி லெல்லாஞ் சென்று சமீபத்திலுள்ள அரசமரத்தடியிற் பிரணவப்பொருளாம் பெருந்தகையைப் பிரதிஷ்டை செய்தல்வேண்டும். இனிப் பெண்மக்களுக்குச் சமயஞானத்தையூட்டுதலிலும் நாம் நமதுகவனத்தைநன்கு செலுத்துதல் வேண்டும். நமது பெண்மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பெயர் நமது சமயக்கொள்கைகளை நன்கு உணராதவர்களாகவேயிருக்கிறார்கள். சமயஞானம் பெண்மக்கள்பால் வளர்ந்தாற்றான், வருங்காலத்துப் பிள்ளைகள் எல்லாரும் சமயஞானவடிவமாகத் தோன்றுவார்கள். எனவே இந்நெறியினைத் திருத்தொண்டர்கள் சிறிது வளர்ப்பதோடு, கல்வியறிவுள்ள தாய்மார்களும் பலர் முன்வந்து இதற்காகப் பெரிதும் பாடுபடல்வேண்டும். குருடர் செவிடர் ஊமையர் முதலியவர்களுக்கும் நமது சமயச்சார்பில் ஒருசில இடங்களில் பாடசாலைகள் தாபிக்கப்படல் வேண்டும். திக்கற்ற குழந்தைகளை வைத்து வளர்த்தற்குரிய அநாதரக்ஷகாலயங்களும் நமது சமயச்சார்பில் ஆங்காங்கு அரும்புதல்வேண்டும். இது சிறந்த பெரிய வேலையாகும். இதற்குப் பெரும் பொருள் வேண்டும். இப்பெரும் பொருளைப் பெறுதற்கு இலேசானவழி ஒன்றுஉண்டு. ஓர் பெரிய நீர்நிலை வீண் சமர்கிலத்திற் பாய்ந்துகொண்டிருக்கின்றது. அதனை இவ்வழியிற் திருப்பிவிட்டாற் போதும். அஃதாவது வீண் சோம்பேறிகள் வயிறார வுண்டு ஏப்பமிட்டுக்கொண்டு திரிதற்குக் காரணமாகவுள்ள அன்னசத்திரங்களை, "ஆதலர்க்கன்னசாலை ஓதுவார்க்குஉண்டி" என்னும் ஆன்றோர் வாக்கிற் கிலக்காக இவ்வழியிற் பயன்படுத்துதல்வேண்டும். அன்னசத்திரங்கள் வைத்திருப்போர் இதனை நன்கு கவனித்து அவசியம் சீர்திருத்துதல் வேண்டும்.

இனி, நமது சைவப் பெருமக்கள் வைத்திருக்கின்ற தருமவைத்தியசாலைகளில், காலையும் மாலையும் சடவுள்வணக்கஞ்செய்வதோடு, சமயசம்பந்தமான அண்டுப்பிரசுரங்களையும்வழங்கி, நோயாளிகளுக்கும் அவர்களோடுகூட வருவோர்க்குஞ் சமயபோதனைசெய்தல்வேண்டும். நமது அருந்தமிழ்ப் பாடசாலைகளிற் சமயபோதனையும் ஓர் முக்கியமான பாடமாகக் கருதப்படல்வேண்டும். இக்காளில் இது நன்கு கவனிக்கப்படாதது பெரிதும் வருந்தத்தக்கதேயாம். சமயஞானங் கலவாத கல்வியறிவு எட்டுணையும் பயன்படாது. எனவே, அருந்தமிழ்க் கலாசாலைகளின் அதிகாரிகள் சமயக்கல்வியினையும் முக்கியமானதாகக் கருதுதல் வேண்டும். இவ்வாறு பாடசாலைகளிற் சமயக்கல்வியினைப் போதிப்பதற்குப் போதினர்களுடையஉதவிகள் மிக இன்றியமையாதனவாம். முதற்கண், செய்யுள் வடிவமாகவுள்ள சமயநூல்களனைத்தினையும் இனிய எளிய வசன வடிவமாகவும் ஆக்கித்தரல்வேண்டும். மெய்கண்ட சாத்திரம் பதினான்கினையும் பன்னிருதிருமுறைகளினையும் வடித்துத் திரட்டி ஒன்றாகக் கூட்டி, ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ச தேவர் உபதேசமொழியைப்போல், சிறுச் சிறு உவமானங்களாலும் கதைகளாலும் சரித்திரங்களாலும் பெரியதத்துவங்களை விளக்கிக் காட்டும்வண்ணம், சைவசித்தாந்த அமுதமொழிகள் எனும் பெயரோடு ஓர் இனிய நூல்எழுதித்தரல்வேண்டும். 'சைவசமயம் என்பது என்ன?' எனும் பெயரோடு சைவசமயக் கொள்கைகளனைத்தினையும் வெள்ளிடை மலைபோல் விளக்கிக் காட்டும் இனிய வசனநூல் ஒன்றும் அவசியம் எழுதப்படல் வேண்டும். இவ்விருநூல்களும் ஆங்கிலத்திலும் யாக்கப் பெறல்வேண்டும். ஆண்டுதொறும் தலபுராணங்களை எழுதி எழுதிக் குவிக்கும் புலவர் பெருமக்களும் வீண் விவாதங்களையே எழுதி வெளியிடும் அன்பர்களும், இவ்வழியில்இறங்கி வேலைசெய்தல் பயனுடையதாகும். பொதுவாக மாணவர்களுக்குச் சிறந்த நூல்களைக் குறிப்பிட்டு ஆண்டிற் கொருமுறை சமயப் பரீக்ஷை வைத்து அதிற் தேறுபவர்களுக்குப் பரிசுகளும் யோக்கியதாபத்திரங்களும் வழங்குதல்வேண்டும். பொதுவாகவும், சாத்திரங்களிலும், தோத்திரங்களிலும் ஆக மூன்று திறமாகப் பரீக்ஷைகள் வைத்து நடாத்தலாம். தோத்திரப்பரீட்சையினைக் குறிப்பிட்டஎண்ணுள்ள பாடல்களைப் பிழையற ஓதுவார்க்கு நடாத்தலாம்.

(வரும்) —செந்தமிழ்ச் செல்வி.


# "ஸ்ரான்டேர்ட்" கொழுக்கியோடுகள்.

## (Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றோம்:—

முதலாவது, இந்தஓடுகள்மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வட இலங்கையின் தேசசுவாத்தியத்திற்கு இயைந்தஓடுகள் இவைகளேயாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றுவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றோம். இந்த மூன்று வருட காலத்துள் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென்பதற்கு இந்த ஒருநியாயமுமே போதிய சான்றாகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்லுவெட்டித்துறையிலும், பருத்தித்துறையிலும் எங்களிடம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை.

தந்திவிலாசம்,
"Ruby" வல்லுவெட்டித்துறை
(H. 25.)


## நமது புராதன வழக்கங்களுக்கு ஆதாரமான சுகாதார தத்துவங்கள்.

(முற்றொடர்.)

### யாத்திரைகாலத்தில் உண்ணுமை.

சில வைதிக ஹிந்துக்கள் யாத்திரைசெய்கையிற் புசிப்பதில்லை. அவர்களுக்குப் பழங்களாவது, தாம்பூலமாவது கொடுத்தாலும், அலம்பாமல் அவைகளை அவர்கள் உபயோகிப்பதில்லை. பழக்காரர்கள் பரம அசுத்தமாகவிருப்பதால் பழங்களில் எண்ணற்றகிருமிகள் தொத்திக்கொண்டிருக்கலாம். பழங்களை அலம்பிவிட்டாற் கிருமிகள் அநேகமாக அப்புறப்பட்டுவிடுகின்றன. ஆகவே அநிகமான வியாதிகளுக்கு ஆஸ்பதமுமில்லாது போய்விடுகிறது.

### சூப்புதல்.

சூப்பும் வழக்கத்தை வைதீக ஹிந்து குடும்பங்களிற் காண்பதரிது. ஐரோப்பியர்களுடைய பழக்க மேற்பட்டவர்களே சூப்பிச் சாப்பிடுகின்றனர். க்ஷயரோகி உபயோகித்த பாத்திரத்திற் சூப்பிக் குடிப்பதால் நமக்கும் க்ஷயம் ஏற்படுகின்றது. உஷ்ணமான ஜலத்தில் பாத்திரத்தை சுத்தம் செய்துவிட்டால் இந்த அபாயம் போய்விடும். ஆனால் நாம் அவ்விதம் செய்வதில்லை; நம்முடைய நித்திய வாழ்வில் அவ்விதம் செய்வதும் சாத்தியப்படுவதில்லை. ஆகவே சூப்பாமலிருப்பதுதான் உத்தமம். ஒரே பாத்திரத்தைப் பலர் உபயோகப்படுத்தும் போஜன விடுதிகளிலும், கிளப்புகளிலும் இந்த அபாயம் அதிகமாக இருக்கிறது. இத்தகைய இடங்களிற் சூப்பிச் சாப்பிடவே கூடாது. பிற வீடுகளுக்குச் சாப்பிடச் செல்லுகையில் தீர்த்த பாத்திரத்தைக் கையுடன் கொண்டுபோகும் நமது முன்னோர்களுடைய வழக்கமானது உத்தமமானது. இதனால் வியாதிகள் தொத்துவதற்கு இடமில்லாது போய்விடுகிறது.

### சிரம பரிகாரம்.

போஜனமுண்டபிறகு சிறிதுநேரம் சிரமபரிகாரம் செய்துகொள்ளும் வழக்கம் இன்னமும் நம்மிற் சிலரிட மிருந்துவருகிறது. இதனால் ஏற்படும் அநுகூலம் நம்மவர்களுக்குத் தெரியவில்லை. அவசரமாக ஆபீஸுக்குப் போகவேண்டியிருப்பதாற் சாப்பிட்டு இரண்டொரு நிமிஷம் தங்கிவிட்டுப் புறப்பட்டுவிடுகிறோம். வயிறு நிறைய ஆகாரத்தைப் புசித்ததும், ஜீரண கருவிகளுக்கு நம்முடைய சரீரத்திலுள்ள இரத்தம் முழுவதும் தேவையாகவிருக்கிறது. நாம் நடந்தாலும், மனோ வேலைசெய்தாலும், இதர கருவிகள் ரத்தத்தை உபயோகித்துக் கொண்டுவிடுவதால், ஜீரணக் கருவிகளுக்கு வேண்டிய ரத்தம் கிடைப்பதில்லை. இந்தத் தொல்லைவற்படாமலிருப்பதற்காகச் சாப்பிட்டபிறகு அரைமணி நேரம் சிரமபரிகாரஞ் செய்துகொள்ளுகிறோம். இந்த விதியை அநுஷ்டிக்காததாலேயே பல மாணவர்கள் அஜீரண வியாதியால் அவதிப்படுகிறார்கள். நமது பையன்கள் 10 மணிக்குச் சாப்பிட்டு, பாடசாலைகளுக்கு ஓடுகிறார்கள். போஜனத்திற்குப் பிறகு சிரமபரிகாரம் அவர்கள் செய்துகொள்ளாததால் அவர்களுடைய ஜீரண சக்தி குறைகிறது. இந்த விதியை அடிக்கடி மீறி நடப்பதால் அஜீரண வியாதி ஸ்திரமாக ஏற்பட்டுவிடுகிறது.

### எண்ணெய் ஸ்நானம்.

நேர்மையான சுகாதாரவிதிகளைத் தழுவியே அப்யங்கன ஸ்நான முறை ஏற்பட்டிருக்கிறது. ஒருநாள்பருக்காக விருந்து நடத்துகையில், விருந்தினரை அப்யங்கன ஸ்நானம் செய்யச் சொல்லுகிறோம். விசேஷதினங்களில் நாம் அநேகமாக அப்யங்கன ஸ்நானம் செய்கிறோம். உஷ்ண தேசத்தில் வசிப்பவர்கள் அப்யங்கன ஸ்நானம் செய்யவேண்டியதவசியமென்பதை நம்மிற் பலர் அறிந்திருக்கவில்லை. தலையிலும், சரீரத்திலும் எண்ணெய் தேய்த்துக்கொள்ளுவதால், சரீரத்துவாரங்களை அடைத்திருக்கும் அழுக்கு நீங்கிவிடுகிறது: துவாரங்கள் திறந்துகொள்வதால் வியர்வை தாராளமாக வெளிப்படுகின்றது. ஆகவேதான் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தபிறகு அதிக வியர்வை நமது சரீரத்திலிருந்து வெளிப்படுகிறது. உஷ்ணமாதங்களில் நமது சரீரம் கொதிப்படைந்து, வியர்வை வெளிப்படுவதால் சரீரம் குளிர்ச்சியடைகிறது. எண்ணெய்தேய்த்து ஸ்நானம் செய்வதால் விஷத்தன்மையினதான வியர்வை வெளிப்படுவதை நமது முன்னோர்கள் அறிந்தே விசேஷதினங்களில் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டுமென்று விதித்திருக்கிறார்கள்.

### குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம்.

நம்மிற் பலர் அதிகாலையில் நதியிலாவது, குளத்திலாவது ஸ்நானம் செய்கிறார்கள். இதனால் ஏற்படும் அநுகூலம் நம்மிற் பலருக்கு இன்னும் தெரியவில்லை. குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்து, உலர்ந்த சவுக்கத்தால் சரீரத்தைத் துடைத்துக்கொள்ளுவதால் சர்மத்திற்குச்சமீபத்தில் ரத்தஓட்டம் ஏற்பட்டு, சர்ம வியாதிகள் ஏற்படாமலிருகின்றன. நமது நரம்புகளுக்கும் அது வலுவைக் கொடுத்து, சரீர சக்தியையும் அதிகப்படுத்துகிறது. நுட்பமான சரீரமுடையவர்களுடைய சக்தி அதிகரிக்கவேண்டு மென்பதற்காக வைத்தியர்கள் குளிர்ந்த ஜலத்தில் அவர்களை ஸ்நானம் செய்யச் சொல்லுகின்றனர். நாம் இந்த வழக்கத்தைவிட்டுவிட்டு உஷ்ண ஜலத்தில் ஸ்நானம் செய்து வருகிறோம். அந்த ஸ்நானமானது இன்பகரமாக விருந்தபோதிலும், நரம்புகளை பலஹீனப்படுத்தி, உற்சாகக்குறைவை உண்டு பண்ணுகிறது. நமது முன்னோர்கள் குளிர்ந்த ஜலத்தில் வழக்கமாக ஸ்நானம் செய்துவந்தது அதிசயமன்று.

### பசுவின் சாணம்.

பசுவின் சாணியை ஜலத்திற் கரைத்து வீடுகளை மெழுகுவது ஹிந்துக்களுக்கு வழக்கமாக இருந்து வருகிறது. இது அசட்டு வழக்கமென்றும், சாணியில் வியாதிக் கிருமிகள் தங்கலாமென்றும் நாம் நினைக்கிறோம். ஆனால் அதனால் ஏற்படும் சௌகரியங்களையும் கவனிக்க வேண்டும். ஹிந்துக்களிற் பலர் ஏழைகளாகவிருக்கிறார்கள். அவர்களுடைய வீடுகளின் தரையானது மண்ணாகவிருக்கிறது. அடிக்கடி சாணி ஜலத்தைக் கொட்டி மெழுகுவதால் தரை கெட்டிப்பட்டு, வீட்டில தூசி குறைகிறது. தூசியானது சரீரத்திற்குக் கெடுதலை உண்டுபண்ணுவதாலும், பலவித சுவாஸாசய நோய்களுக்கு அதுவே காரணமாக விருப்பதாலும், நமது முன்னோர்கள் இந்தவழக்கத்தை அநுட்டித்து வந்தார்கள். தவிரவும், பசுவின் சாணி காய்ந்துபோய்விட்டால் அதில்வியாதிக் கிருமிகள் தங்குவதில்லை. ஆகவே அதனாற் கெடுதியைவிட அதிகமாக நன்மையே உண்டாகிறது.

சுகாதார விதிகளைத் தழுவியே நமது முற்கால வழக்கங்களிருப்பதற்கு இன்னும் பல உதாரணங்களைச் சொல்லக்கூடும். மேனாட்டு வழியில் நாம்கல்விகற்றுவருவதாலேயே நமது புராதன வழக்கங்களில் நமக்கு அருவருப்பு ஏற்பட்டிருக்கிறது. மேனாட்டுப் பழக்கங்களைச் சிலாகிக்கும்படியே நமக்குக் கற்பிக்கப்பட்டு வருகிறது. மேனாட்டுப் பழக்கங்களில் நமக்கேற்பட்டுவிட்ட அபிமானத்தால் கெடுதலான மேனாட்டுப் பழக்கங்களையும் நாம் சிலாகித்து, நமது பூர்விகப் பழக்கங்களை தூஷிக்கிறோம். நம்முடைய புராதன வழக்கங்களை நாம் கண்டனம் செய்யுமுன் நீண்ட காலம் சந்துஷ்டியாக வாழ்ந்துவர இந்தப்பழக்கங்கள் அநுகூலமாக இருந்திருப்பதை நாம் கவனித்து, நிஷ்பக்ஷபாதமாக அவைகளிலுள்ள குணங்களை ஆராய்வோமாக. அவைகளிற் கெடுதலான அம்சங்களிருந்தால் அவைகளைத் திரஸ்கரிப்போம். ஆனால் அவைகள் நம்மவருடையபழக்கங்களாக இருப்பதற்காக அவைகளைக்கண்டனம் செய்துவிடவேண்டாம். —ஆரோக்கிய தீபிகை,

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

—— 0 ——

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டவோச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் வண்மேற்கு கொட்டடி குமாரசாமி தெண்டாயுதபாணியிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போதவணை தப்பி டை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்:—

1923ஃ.

| நம். | மா. | திக | ரூ. | ஊர் பெயர் நகைவிபரம். |
|---|---|---|---|---|
| 436 | தை | 5 | 30 | ஊர்காவற்றுறை ய. சவுரிமுத்து பொன்கொலிசு சோடி 1 |
| 718 | மாசி | 8 | 30 | சோனகதெரு கெ. முகம்மதுயூசுப்பு காதுவாளி 4, மூக்குத்தி 1 |
| 765 | ,, | 15 | 7 | சின்னக்கடை வ. மருவல்ப்பிள்ளை குவளைக்கடுக்கன் சோடி 1 |
| 779 | ,, | 17 | 25 | காரைதீவு ச. கந்தப்பு சறட்டட்டியல் 1 |
| 1245 | வை. | 12 | 25 | சோனகதெரு மு. செயதிமுகம்மது குவளைக்கடுக்கன் 2, குப்பி 2, தோடு2 |
| 1312 | ,, | 19 | 10 | அராலி அ. சிற்றம்பலம் கடுக்கன் 2 |
| 1506 | ஆனி | 9 | 12 | செம்மாதெரு சி. உசன் கல்வாளி 2 |
| 1508 | ,, | 9 | 12 | செட்டித்தெரு கா. துரையப்பா மோதிரம் 1 |
| 1523 | ,, | 11 | 9 | சோனகதெரு மெ. வரிசைமுகம்மது கல்மோதிரம் 1 |
| 1542 | ,, | 13 | 15 | சோனகதெரு கா. முகம்மதுஅப்துல்காதர் இரண்.பட்டுமணி சோ.1 |
| 1579 | ,, | 16 | 6 | மாதகல் சி. வைத்திலிங்கம் குப்பிக்கடுக்கன் 2 |
| 1604 | ,, | 18 | 6 | கடையடி சி. கந்தன் மணி 1 |
| 1618 | ,, | 20 | 10 | கன்னாதிட்டி சு. மெய்யப்பத்தர் கல் இளைத்தமுருகுகள் 4 |
| 1696 | ,, | 30 | 13 | பருத்தித்துறை சி. நாகலிங்கம் கைச்சங்கிலி 1 |
| 1900 | ஆடி | 20 | 12 | சோனகதெரு செ. முகம்மது குப்பிக்கடுக்கன் 2, செடைப்பூ 1 |
| 1914 | ,, | 22 | 10 | இணுவில் தி. இராசையா பொன்கொடி 1 |
| 1938 | ,, | 26 | 9 | தொல்புரம் சி, முத்துக்குமாரு மோதிரம் 1 |
| 1942 | ,, | 26 | 20 | செட்டித்தெரு க. முத்துக்குமாரு வாளி 2, ஓலை 2 |
| 2004 | ,, | 30 | 7 | கோண்டாவில் மு. சின்னன் கொடைப்பூ 1 |

விற்பனவு:—இரத்தாக்ஷி ஆடிமீ 25உ (9-8-24) சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்டநகை பிற நீங்கலாக பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளைஉடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis. 511,)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் தொண்டமானாறு சி. இராமசாமியிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போதுதவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்.

1922ஃ

| நம். | மாசம் | ரூ. | ச. | ஊர் பெயர் நகைகளின் விபரம். |
|---|---|---|---|---|
| 1199 | புரட்டாதி | 20 | | வல்வெட்டித்துறை பொ. நாகரெத்தினம் தங்கவேடி 1 |
| 1214 | ஐப்பசி | 50 | | வல்வெட்டித்துறை ச. மாணிக்கம் பொன் காப்பு சோடி 1 |
| 1215 | ,, | 35 | | உடுப்பிட்டி அ. ஆறுமுகம் கற்தோடு சோடி 1 |
| 1232 | கார்த்தி. | 50 | | வல்வெட்டித்துறை பொ. சின்னி பொன் காப்புசோடி 1 |
| 1235 | ,, | 10 | | கோவிலடி க. செல்லையா சிமிக்கிவாளி சோடி 1 |
| 1251 | ,, | 20 | | உடுப்பிட்டி வே. தம்பு கற்கடுக்கன் சோடி 1 |
| 1268 | ,, | 9 | | வல்வெட்டித்துறை சி. கந்தசாமி |
| 1282 | மார்கழி | 62 | | வல்வெட்டித்துறை நா. பொன்னுத்துரை பொன் காப்பு சோடி 1 |
| 1287 | ,, | 12 | 89 | உடுப்பிட்டி சி. அருளம்பலம் பொன் காப்பு சோடி 1 |
| 1293 | ,, | 20 | | தொண்டமானாறு சி. சின்னாச்சி சிமிக்கிவாளிசோடி1, கொன்றைப்பூ 1 |
| 1296 | ,, | 51 | 54 | கொம்மந்துறை வே. சந்தையா கம்பிப்பூராணட்டியல் 1 |
| 1299 | ,, | 6 | | வல்வெட்டித்துறை சி. மாணிக்கம் சிமிக்கிவாளி சோடி 1 |
| 1307 | ,, | 30 | | தொண்டமானாறு நா. வள்ளியம்மை சிறுபிள்ளைக் காப்பு சோடி 1 ஓலைச்சரடு 1 |
| 1923ஃ | | | | |
| 1357 | தை | 43 | | வல்வெட்டித்துறை வே. சின்னத்தம்பி கொன்றைப்பூ 1, மயிர்மாட்டி சோடி 1 |
| 1358 | மாசி | 23 | 95 | தம்பாலை இ. சரவணை நாட்டுக் கடுக்கன் சோடி 2 |
| 1377 | பங்குனி | 8 | | வல்வெட்டித்துறை வச. தையல்முத்து பொன் தோடு சோடி 1 |
| 1380 | ,, | 8 | | ,, ,, மணியட்டியல் 1 |
| 1394 | ,, | 12 | | உடுப்பிட்டி S. வீரசிங்கம் பொன் மோதிரம் 1 |
| 1441 | சித்திரை | 17 | 25 | கெருடாவில் வே. சின்னப்பிள்ளை கற்தோடு சோடி 1, கடுக்கன் சோ. 1 |
| 1478 | ,, | 10 | | நீலாந்தனை வே. தெய்வானை குழற்காப்புசோடி 1, பொன் தோடுசோ.1 |
| 1491 | ,, | 35 | | வல்வெட்டித்துறை வே. சண்முகம் கொன்றைப்பூ1, சிமிக்கி வாளி சோடி 1, பொன் தோடு சோ.1 |
| 1494 | வைகாசி | 15 | | வல்வெட்டித்துறை ஞா. சிவப்பிரகாசம் மோதிரம் 2 |
| 1495 | ,, | 10 | | ,, வ. சிவக்கொழுந்து பொன் தோடு சோடி 1 |
| 1508 | ,, | 10 | | ,, க. தங்கமுத்து கடுக்கன் சோடி1, வாளி சோடி 1 |
| 1519 | ,, | 100 | | ,, வே. சின்னம்மா எஸ் அட்டியல் 1, மோதிரம் 1 |
| 1540 | ஆனி | 220 | | கெருடாவில் பொ. செல்வநாயகம் சங்கிலி 1, கண்டசரம் 1 |
| 1555 | ,, | 8-44 | | வல்வெட்டித்துறை சி. தங்கம்மா கடுக்கன் சோடி 2, மூக்குத்தி 1 |
| 1563 | ,, | 30 | | வல்வெட்டித்துறை சி. வே. பொன்னுச்சாமி செட்சாபந்தனம் 1 |
| 1583 | ஆடி | 159-25 | | பலாலி அ. சுவாமி பொன்காப்பு சோடி 2 |
| 1584 | ,, | 97 | | பலாலி அ. சுவாமி தாலிக்கொடி1, நாட்டுக்கடுக்கன் சோடி 4, சிமிக்கிவாளி சோடி 2, அறைவாளிசோடி 2 |
| 1584 | ,, | 128 | | பலாலி அ. சுவாமி கம்பிப்பூரான் அட்டியல் 1, கவுத்தோல் 2, கொண்டைப்பூ 1 |
| 1585 | ,, | 61-25 | | பலாலி அ. சுவாமி கொண்டைப்பூ 2, பெரிய உள்க்கட்டு 1, கடுக்கன் சோடி I, பாதசரம் சோடி 1, கால்ப்பின்னல்சோடி 1 |

விற்பனவு:—1924 ம் ஆ ஆவணிமீ 24உ ஞாயிற்றுக்கிழமை எடுபட்ட நகை பிறநீங்கலாக மிகுதி குறித்த சி. இராமசாமிவீட்டில் விற்கப்படும்.

ஆ. இராமலிங்கஉடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis. 512).


அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அண்டுமருந்துக்கண்காக்ஷியில் பஸ்கிளாஸ்(முதல்தர)தேவஔஷதங்களைத்தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும்பெற்ற

உலகம் புகழ்வது.




உள்ளநாளும் மறவாதது.

### சூலை, குஷ்டம், ரணம், பத்து முதலிய சகல வியாதிக்குங் கைகண்டது.

# குரு தாம்பர பஸ்பம்.

முப்புவினல் தளுக்கற நீற்றியது. களிப்பற்றது. வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது; பத்தியமில்லை. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

பலனில்லாவிடில் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். மறுமுறை வியாதி திரும்பிவாராது. இது சகல வியாதிகளையும் வேரற நீக்கும் சக்தி வாய்ந்தது.

சூலை, குஷ்டம், திமிர், ரணம், மதமதப்பு, தடிப்புக்கள், கிரந்திகள், பத்துக்கள், கைகால் ரணங்கள், குன்மம், மேகம், பவுத்திரம், கண்டமாலை, சூலைநீர், முதலிய சகல கர்மவியாதிகளும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்.

குறைநோய் சம்பந்த வியாதிகள், விரல்கள் அழுகிப்போயிருந்தாலும் சரி, அம்மட்டில் ஆறிவிடும். இது குஷ்டம், கருமேகம், வெண்மேகம், செம்மேகம் முதலியவைகளுக்கு மகா அருமையானது. இதுபோன்ற மருந்து எங்கும் கிடைப்பதரிது.

80 வேளை மருந்து ரூ. 40. 40 வேளை மருந்து ரூ. 20. 20 வேளை மருந்து ரூ. 10. ஏழைகளுக்குப் பாதி விலை. பிரபுக்களுக்கு விலை வேறு. வி. பி. சார்ஸ் பிரத்தியேகம்.

நற்சாட்சி:—திரேகமெல்லாமிருந்த மேகப் பத்துகள் இருந்த இடந் தெரியாமல் மறைந்துவிட்டன. கை, கால் விரல்களிலிருந்த ஆறாத மேக ரணங்கள் பூரா ஆறிவிட்டன. முக வசீகாமும் பசியும் உண்டாயிருக்கின்றன. K. பழனியாண்டிபிள்ளை, செருதார், லால்குடி, திருச்சி.

☞ வீரியவிர்த்திக்கு நிகரற்ற

### மன்மத கோலாகல குளிகை.

அபூர்வ சக்தி வாய்ந்தது!! ஆச்சரியமான குணமுள்ளது!!

புதிய நலத்தைக் காட்டும் ஒரு முறை பரிக்ஷிக்கவும்!! போன பலத்தை மீட்கும் அதை இன்றே பார்க்கவும்!!

வீரியவிர்த்திக்கு இது நிகரற்றது. இதற்கு ஈடான மருந்து புவியிலெங்குமில்லை. ஒரே குளிகையில் பரிக்ஷிக்கலாம். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, போகசக்திக்குறைவு முதலியவைகள் நீங்கி நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி உண்டாகும். வீரியக்கட்டும், இழந்த பலமும், ஆண்மையுந் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பரிக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

120 குளிகை ரூ. 10. 60 குளிகை ரூ. 5. 30 குளிகை ரூ. 3. மாதிரிக்கு 20 குளிகை ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

திருச்சி கா. யி. மு. இப்ராம்ஸா 3-I-23-ல் எழுதுகிறார்:

தங்கள் மன்மதகோலாகல குளிகையைச் சாப்பிட்டதில் ரத்தத்தை சுத்திசெய்து நரம்புத்தளர்ச்சியை நீக்கி நல்ல பலத்தையும் வீரிய விருத்தியையும் கொடுத்து உற்சாகத்தையும் இன்பத்தையும் தருகிறது. இன்னும் 3-ரூபாய் குளிகை வி. பி. யில் அனுப்பவும்.

சித்த ஆயுர்வேத டாக்டர்
C. மலையப்பசாமி பிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

Q. (A) 46.)

### பித்தளை டம்ளர்கள்.

இந்திய கைத்தொழிலை ஆதரியுங்கள்!

உயர்ந்த பித்தளைத் தகட்டினால் செய்யப்பட்டது. அழகான நகாஸ் வேலைகள் செதுக்கப்பட்டதோடு பார்வைக்குப் பழபழப்பாகவிருக்கும்.

நகாஸ் வேலை செய்யாத சாதா டம்ளர்களும் உண்டு.

நகாஸ் டம்ளர் 3கொண்ட செட் 1க்கு ரூபா 1/12.
சாதா டம்ளர் 3 கொண்ட செட் 1க்கு ரூபா 1/9.



கே. எஸ். முத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.

(Y. 29.)

உங்கள் குழந்தைகளுக்கு
## லக்ரோஜின்
என்னும்
இயற்கையான பாலுணவை ஊட்டி
நன்மையடையுங்கள்.
இந்தப் பாலுணவே
முலைப்பாலுக்குச் சமானமானது.
இது
தசையையும் என்புகளையும் விருத்தி செய்யும்
சக்திவாய்ந்தது.
இந்த உணவை உண்டு வளர்ந்த குழந்தைகள்
இறுக்கமான தசைநார்களும்
அரோகதிடகாத்திரமு முடையவர்களாய்
இருக்கிறார்கள்.
## லக்ரோஜின்
சகலவிதமான பராக்கிரம முடையவராக்கும்.
இந்த உணவை
இலங்கையிலுள்ள ஔஷதசாலைகளிலும்
கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
மேற்படி இடங்களில் கிடைக்காவிடில்
நேரே எங்களுக்கு எழுதுங்கள்.
மாதிரி லக்ரோஜின் உணவும் அதின் விபரங்களடங்கிய புத்தகமும் உடனே அனுப்பப்படும்.

| | |
|---|---|
| பிறீ கூப்பன். .H .O (Q. 49.) | நெஸ்லின் & அங்கிளோ சுவிஸ் கொன்டென்ஸ்ட் மில்க் கோ., தபாற்பெட்டி, 189, கொழும்பு. தயவுசெய்து உங்கள் அரிய புத்தகத்தில் (Baby Book) ஒன்றும், மாதிரி லக்ரோஜின் உணவும் கிரயமின்றி அனுப்பவும். பெயர்:— ........ விலாசம்:— ........ |


வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.